* 124 *Q*.—THIRU A. BALASUBRAMANYAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have considered the recommendation of the District Development Council (Tiruchirappalli South) for bifurcation of Tiruvarangulam Panchayat Union; and

(b) if so, the decision taken by the Government thereof ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) அக்கோரிக்கையை ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இதுபோன்ற அநேக பெரிய பஞ்சாயத்து யூனியன்களை இரண்டாகப் பிரித்து மாற்றியமைப்பது குறித்து அரசு ஏதாவது ஆலோசனை செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மத்திய அரசாங்கம் இப்போது விஸ்தரிப்பு திட்டத்தின்கீழ் நம்முடைய தமிழ்நாட்டில் 374 ஊராட்சி ஒன்றிப்பு யூனியன்கள் இருக்கின்றன. சில இடங்களில் பெரிய ஊராட்சி ஒன்றியமாக இருப்பதால், வசதிக் குறைவுகள் ஏற்படும் என்று திட்டவட்டமாக கோரிக்கைகள் வந்தால், தகுந்த முடிவு எடுக்கப்படும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : ஏற்கெனவே இருந்த அரசாங்கம் பஞ்சாயத்து ஏரியாவைத் திருத்தவில்லை. ஒரு ஏரியா ஒரு வட்டத்தில் இருக்கும்போது, அதற்கு அந்தப் பக்கம்கூட ஒரு பஞ்சாயத்து ஏரியாவைப் பிரித்திருக்கிறார்கள். இனி, நல்ல முறையில் பிரிக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு பேரவைத்தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி தெற்கு திருச்சி பற்றிய அபிவிருத்திக் கவுன்சிலைப் பற்றியா ? இல்லையென்றால் இக்கேள்வி அனுமதிக்கப்படமாட்டாது.

* 125 *Q*.—THIRU M. WILLIAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to withdraw the Panchayat Union Commissioners and the Extension Officers from the panchayat unions ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஊராட்சி ஒன்றிப்பு ஆணையாளர்களை தற்போது நீக்க வேண்டுமென்ற உத்தேசம் இல்லை. சில பொறுப்பான பதவிகளை மாற்றியமைப்பது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

THIRU K. VINAYAKAM: As this question involves the general policy of the Government regarding Panchayats and their employees, may I know whether the Special Officer who has been appointed to go into this matter and who had been sent to other States to study it, has submitted his report and if so, what action has been taken ? What is its future set-up and will there be a change or will it continue to be as before ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இதுபற்றிய முழுத் தகவல்களைத் தெரிந்துக்கொள்வதற்காக மத்தியப் பிரதேசத்திற்குச் சென்று வந்த தனி அதிகாரி ஒரு அறிக்கையைக் கொடுத்திருக்கிறார். எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து அதுபற்றிப் பேசுவதாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். தேவையான மாற்றங்கள் செய்வது குறித்து ஆலோசிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.